அதைப் போக்க வேண்டும் என்ற முறையில் சர்க்கார் தீவிரமாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது இருக்கிற சூழ்நிலையில் தமிழகத்தில் மூன்று சர்க்கரை ஆலைகளைத் துவக்க வாய்ப்பு இருக்கிறது. இவை துவக்கப்பட்டால் நம்முடைய மாநிலத் தேவையும் பூர்த்தியாகும், பிற மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்கிற வசதி ஏற்படக்கூடும் என்ற காரணத்தினால் இந்திய அரசுக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது. அவர்களது ஒப்புதல் வந்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

Departmental works

*6 *Q.*—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether construction of new buildings was carried out departmentally on experimental basis; and

(*b*) if so, whether any saving was effected thereby?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை. எனினும், ஒப்புந்தப்புள்ளிகளை ஒப்பந்தக்காரர்கள் கொடுக்க முன்வராத நேர்வுகளில் அல்லது ஒப்பந்தக்காரர்கள் அதிகத் தொகைகளைக் கேட்ட நேர்வுகளில், சம்பந்தப்பட்ட பணிகளை துறை மேற் கொண்டு நிறைவேற்றியது.

(இ) துறை நிறைவேற்றிய சில பணிகளில் செலவு மிச்சமும் ஏற்பட்டது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மலிவு விலையில் கட்டடம் கட்டுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் சிலபல கட்டடங்களையாவது துறையினர் தாங்களே எடுத்து நடத்தி—பில்டிங் மெட்டீரியல்ஸ் சம்பந்தமாக ஒரு ஆராய்ச்சி செய்வதற்கு திட்டம் ஏற்படுத்த முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதற்கு இப்போது இடம் இல்லை. பி.டபிளியூ.டி. விதிகள் மாற்றப்படவேண்டும். அதுபற்றி அரசு யோசிக்கும்.

திரு. கே. விநாயகம் : பொதுக் கட்டடங்கள் கட்ட வேண்டு மென்றால் காண்டிராக்டர்களிடம் விட்டு கட்டவேண்டும் என்று இருக்கிறது. காண்டிராக்டர்களுக்கு அரசு நிர்ணயித்துள்ள ரேட்டு பழங்காலத்தில் நிர்ணயிக்கப்பட்டது, அது இப்போது எடுத்துக் கட்டுகிற கட்டடங்களுக்குக் கட்டுபடியாகவில்லை. அதனால்தான் எந்தப் புதுக் கட்டடங்களையும் காண்டிராக்ட்டில் எடுத்து வேலை செய்ய காண்டிராக்டர்கள் வருவதில்லை. ஆகவே இன்றைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு பழைய ரேட்டுகளை மாற்றி உயர்த்திக் கொடுக்க ஆராய்ச்சி நடத்தப்பட்டிருக்கிறதா ? இல்லை யென்றால் இப்போதுள்ள ரேட்டை போதிய அளவு உயர்த்திக் கொடுக்க சர்க்கார் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கனம் உறுப்பினரிடம் எந்தக் காண்டிராக்ட்ர் வந்து குறைபட்டுக்கொண்டார் என்று தெரியவில்லை. கட்டுபடியாகவில்லை என்று சொல்லி எடுத்த வேலையை விட்டுவிட்டுப் போன காண்டிராக்டர்கள் வேலைகளை துறையினரே ஏற்று நடத்தியிருக்கிறார்கள். இப்படி ஏற்று நடத்தியிருப்பதில் அவர்களுக்கு நிர்ணயித்த ரேட்டிலேயே அதிக மிச்சம் ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டேன்.

திரு. கரு. சீமைச்சாமி : பொதுவாக பழைய ரேட்டுகள் தான் இருக்கின்றன. அதன் காரணமாக பஞ்சாயத்து யூனியன் வேலைகள் தடைபடுகின்றன. ஆகவே இன்றுள்ள விலைவாசிக்கேற்ப அந்த ரேட்டுகளை உயர்த்திக்கொடுக்க அரசு யோசனை செய்யுமா? குறிப்பாக, கண்மாய்கள் வெட்டுவது என்றால் மைலுக்கு 18 ரூபாய் கொடுக்கிறார்கள். இப்போது குழி வெட்ட 18 ரூபாய் கேட்கிறார்கள். இதனால் கண்மாய் வேலைகள் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கின்றன. ஆகவே, பழைய ரேட்டுகளை எல்லாம் மாற்றி, இன்றுள்ள சூழ்நிலைக்கேற்றவாறு உயர்த்திக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எந்த, எந்த வேலைகள் தடைபட்டிருக்கின்றன என்பதை ஆராய்ந்து அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. எஸ். முருகையன் : பி.டபிள்யூ.டி. ஷெட்யூலில் போட்ட ரேட்டு ஒவ்வோர் ஆண்டும் மாற்றப்படுகிறதா? பழைய ரேட்டே இருந்து கொண்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்போது பழைய தொகை தான் இருந்துகொண்டிருக்கிறது.

திரு. கே. விநாயகம் : அமைச்சர் அவர்கள் என்னுடைய கேள்விக்குப் பதில் சொல்லும்போது என்னிடம் எந்த காண்டிராக்டர் வந்து குறைபட்டுக்கொண்டார் என்று கேட்டார்கள். அதற்குச் சொல்கிறேன், விடை. திருத்தணியில் அரசாங்க ஆஸ்பத்திரிக் கட்டடம் கட்ட வேண்டுமென்று தீர்மானித்து—இப்போது அந்தக் கட்டடம் கட்டுவதற்கு பழைய ரேட் கட்டுபடியாகவில்லை என்று எந்தக் காண்டிராக்டரும் முன் வராதிருக்கிற காரணத்தினால் அந்த வேலை 7 ஆண்டுகளாகத் தடைப்பட்டிருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? தெரியாது என்றால் சுகாதார அமைச்சரவர்களைக் கேட்டாகிலும் பதில் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கனம் உறுப்பினர் விருப்பம் போல சுகாதார அமைச்சரைக் கேட்டு பதில் சொல்கிறேன்.